

இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48' திட்டம் மூலம் 3.40 லட்சம் உயிர்களை காப்பற்றிய, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காணொளி வாயிலாக, மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை சார்பாக, கரூர், வடிவேல் நகர் பெரிய கோதூரில், ரூ 25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய நகர நலவாழ்வு மைய நகர்ப்புற சுகாதாரமையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லறிக்கை, காடூர், புதுவேட்டைக்குடி, கைப்பெரம்பலூர், கி.குடிக்காடு, பழைய அரசமங்கலம், வடக்கலூர், காருகுடி, சின்னபரவாய், எழுமூர், பீல்வாடி, சித்தளி ஆகிய கிராமங்களில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ரூ.4.86 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.இதில் மு.வடிவேல்பிரபு , பா.துரைசாமி, சி.ராஜேந்திரன்,அழகு.நீலமேகம், திருமதி.மரகதவல்லி, சுரேஷ் பார்த்திபன், எட்வர்ட் கென்னடி, குணசேகரன், அறிவழகன், சேகர், சின்னதுரை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கில்

# ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் நவீன உடற்பயிற்சிக் கூடம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு விளையாட்டு வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார்!

நாமக்கல், ஜூலை 12 - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 40.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சி கூடத்தை பார்வையிட்டு, விடுதியில் தங்கியுள்ள விளையாட்டு வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருகின்றது.

மேலும், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையை வழங்கி வருகின்றது.

கிராமங்களில் அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தின் மூலமாக பல்வேறு விளையாட்டுப் பொருட்களை வழங்கியுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள விளையாட்டு விடுதிகளில் தங்கி பயிற்சி பெறும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான தினசரி உணவு படியினை உயர்த்தி வழங்கி வருகின்றார். விளையாட்டு விடுதி வீரர், வீராங்கனைகளுக்கு தினசரி பயிற்சி மேற்கொள்ளவும், ஒட்டுமொத்த செயல்திறன் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் நவீன பை, ஸ்மார்ட் வாட்ச், வெப்பநிலையை சீராக பராமரிக்கும் குடுவை (தெர்மோவாட்டர் பாட்டில்), சூடு / ஐஸ் ஒத்தட பை, தொப்பி, கைத்துண்டுகள், மைக்ரோபைபர் துண்டு, குவளை / கோப்பை ஆகியவை அடங்கிய தொகுப்பினை வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பியாட், இரவு நேர சாலை பந்தய கார் போட்டி, ஹாக்கி போட்டி உள்ளிட்ட பல்வேறு முக்கிய விளையாட்டு போட்டிகளை நடத்தி விளையாட்டு வீரர், வீராங்கணைகளுக்கு தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்து வருகின்றார்.

மேலும், அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள விளையாட்டு விடுதிகளுக்கு நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களை சாதிக்கும் வகையில் உத்வேகம் அளித்து வருகின்றார்.

நாமக்கல் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பெண்கள் விளையாட்டு விடுதியில் 34 மாணவிகள் கால்பந்து விளையாட்டு பயிற்சி பெற்று வருகின்றார்கள். 25 மாணவிகள் கபடி விளையாட்டு போட்டியில் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 40.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சி கூடத்தை பார்வையிட்டு, விடுதியில் தங்கியுள்ள விளையாட்டு வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார். இந்த கலந்துரையாடலின்போது விளையாட்டு வீராங்கனைகள் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெற்றது குறித்தும், அவர்கள் வென்ற பதக்கங்கள், கோப்பைகள் குறித்தும் கேட்டறிந்து, மேலும், பல சாதனைகள் புரிய வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. ஆர்.என்.இராஜேஸ்குமார், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. ராமலிங்கம், கு. பொன்னுசாமி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக்கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அறிக்கை!

கரூர், ஜூலை 12 - கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று(12.07.2025 - சனிக்கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர்அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர்நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், கழக நெசவாளர் அணிசெயலாளர்



பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சிசட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணைசெயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1.உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்குறித்து

2. ஓரணியில்தமிழ் நாடுபுதியஉறுப்பினர் சேர்க்கைகுறித்து

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



உதகை கிழக்கு நகரம் சார்பில், நகரக் கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமையில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை உதகை டம்ளர் முடக்கு பகுதியில் நடைபெற்றது. இதில் தமிழக அரசு கொறடா கா.ராமச்சந்திரன் கலந்துகொண்டு கழக உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்து கழக அரசின் சாதனைகள் குறித்தும், அதன் பலன்கள் குறித்தும் பொதுமக்களிடம் விளக்கி கூறினார். இந்நிகழ்ச்சியில் நகர கழகத் துணைச் செயலாளர் கார்டன் கிருஷ்ணன், மோகன் குமார், மூர்த்தி, கமலக்கண்ணன், சுரேஷ், ஹென்றி ஜேம்ஸ், விஷ்ணுகுமார், சத்யராஜ், டேவிட், அந்தோணி குரூஸ், ராஜா, ஷியாம் மகாதேவன், பிருந்தா, லில்லி, மேனகா பாஞ்சாலி, மேரி டெல்ஸியா, சரோஜா, நசரத் நிர்மலா, சசிகலா, சுகன்யா, ஜெயந்தி சிந்து ப்ரீத்தா நித்தியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### அரியலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 13.07.2025 | ஜெயங்கொண்டம் மத்திய ஒன்றியம் | தண்டலை | கவிஞர் இளஞ்செழியன்<br>சை.சேக் அலிமாஸ் அலி |
| 2 | | திருமானூர் மத்திய ஒன்றியம் | சேனாபதி | பழ.புனிதம்<br>ரா.சிந்துநதி |
| 3 | | அரியலூர் தெற்கு ஒன்றியம் | அருங்கால் ஊராட்சி | எசனை சி.ஆறுமுகம்<br>ப.வெங்கடேஷ் |
| 4 | | தா.பழூர் மத்திய ஒன்றியம் | சுத்தமல்லி ஊராட்சி | மு.விஜயரத்தினம்<br>ஐ.பாலகணபதி |
| 5 | | ஆண்டிமடம் கிழக்கு ஒன்றியம் | பெரிய கிருஷ்ணாபுரம் (ரெட்டிதத்தூர்) | நாமக்கல் ராஜகோபால்<br>சி.மில்லர் மண்டேலா |
| 6 | | செந்துறை வடக்கு ஒன்றியம் | ஆர்.எஸ்.மாத்தூர் | கவிஞர் வீரமுரசு<br>ரா.கனிமொழி |
| 7 | 14.07.2025 | தா.பழூர் கிழக்கு ஒன்றியம் | நாயகனைபிரியாள் | எசனை சி.ஆறுமுகம்<br>அ.அருண்குமார் |
| 8 | | ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம் | குளத்தூர் | கவிஞர் வீரமுரசு<br>காருண்யா நடராஜன் |
| 9 | | ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியம் | ஜெயங்கொண்டம் குறுக்கு சாலை | மு.விஜயரத்தினம்<br>மு.ராமமூர்த்தி |
| 10 | | திருமானூர் மேற்கு ஒன்றியம் | சன்னாவூர் | பழ.புனிதம்<br>துரை தினகரன் |
| 11 | | அரியலூர் வடக்கு ஒன்றியம் | பொட்டவெளி ஊராட்சி, வெள்ளூர் கிராமம். | கவிஞர் இளஞ்செழியன்<br>வா.ராஜேஸ்வரி |
| 12 | | செந்துறை மேற்கு ஒன்றியம் | சன்னாசிநல்லூர் | பவித்ரம் கண்ணன்<br>அ.விஜயலெட்சுமி |
| 13 | 15.07.2025 | தா.பழூர் மேற்கு ஒன்றியம் | திருபுரந்தான் | கவிஞர் வீரமுரசு<br>அ.சுஹாசினி |
| 14 | | ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம் | அழகாபுரம் | கவிஞர் இளஞ்செழியன்<br>ம.சையது முஷரப் |
| 15 | | ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம் | இளமங்கலம் (கச்சிபெருமாள்) | பழ.புனிதம்<br>ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 16 | 16.07.2025 | திருமானூர் கிழக்கு ஒன்றியம் | கோமான் | கவிஞர் வீரமுரசு<br>அ.தீன்ஷா நூஃப் |
| 17 | | செந்துறை தெற்கு ஒன்றியம் | சிறுகடம்பூர் | கவிஞர் இளஞ்செழியன்<br>அ.செல்வக்குமார் |
| 18 | | அரியலூர் நகரம் | வார்டு–13, தேரடி வீதி. | பழ.புனிதம்<br>சி.ஷாலினி |
| 19 | | உடையார்பாளையம் பேரூர் | பேருந்து நிலையம் | கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்<br>அ.தீன்ஷா நூஃப் |
| 20 | 17.07.2025 | ஜெயங்கொண்டம் நகரம் | தேவாங்கர் நடுத்தெரு | கவிஞர் வீரமுரசு<br>ஜெ.ராஜேஸ்வரி |
| 21 | | வரதராஜன்பேட்டை பேரூர் | ஆரோக்கியபுரம் | கவிஞர் இளஞ்செழியன்<br>காருண்யா நடராஜன் |
| 22 | | அரியலூர் மத்திய ஒன்றியம் | வி.கைக்காட்டி | கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்<br>அ.அருண்குமார் |

அரியலூர்

நாள் : 10.07.2025

கலைஞர் 100 1924 - 2023





கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம் தென்பெண்ணை ஆறு நீர் தேக்கி வைக்கும் பாரூர் பெரிய ஏரியில் இருந்து கிழக்கு மேற்கு பிரதான கால்வாய்கள் மூலம் முதல் போக பாசனத்திற்கு விவசாய மக்களின் கோரிக்கையில் ஏற்று 2397.42 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் ஜூலை 10 முதல் நவம்பர் 16ஆம் தேதி வரை முடிய 130 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் பாரூர் பெரிய ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விட்டார். உடன் அவை தலைவர் நாகராஜ், ஒன்றியக் கழக செயலாளர் சாந்தமூர்த்தி நீர்வளத்துறை உதவி செயற் பொறியாளர் அறிவொளி, உதவி பொறியாளர் வெங்கடேஷ், போச்சம்பள்ளி வட்டாட்சியர் திருமதி சத்யா, மற்றும் விவசாயப் பொதுமக்கள் உள்ளார்கள்.